# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

கொள்கை விளக்கக் குறிப்பு
2022 – 2023

மானியக் கோரிக்கை எண். 26

## தா.மோ.அன்பரசன்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 1–7 |
| 1. | நிறுவன அமைப்பு | 8 |
| 2. | 1970 முதல் 2022 வரையிலான சாதனைகள் | 8–9 |
| 3. | ஆளுநரின் உரை – 2022 | 9–11 |
| 4. | வரவு செலவு திட்ட அறிக்கை 2022–2023 | 11–12 |
| 5. | நகர்ப்புற ஏழைகளுக்கான வாழ்விட மேம்பாடு – அணுகுமுறைகள் மற்றும் கொள்கைகள் | 12–23 |
| 6. | நடைபெற்று வரும் திட்டங்கள் | 23–32 |
| 7. | மாநில நிதியுதவி திட்டங்கள் | 33–43 |
| 8. | பன்னாட்டு நிதி நிறுவனங்களின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 43–54 |
| 9. | சென்னை நகர நீர்வழிகளை மறுசீரமைத்தல் – ஆற்றங்கரையில் வசிக்கும் குடும்பங்களுக்கு குடியிருப்புகளை வழங்குதல் | 55–57 |
| 10. | சிறப்பு உள்ளடக்கத் திட்டம் (SCP) (2022–2023) | 57–58 |
| 11. | நில உரிமை / கிரையப்பத்திரங்கள் வழங்கல் | 58–62 |
| 12. | சமுதாய மேம்பாட்டுப் பணிகள் | 62–68 |
| | முடிவுரை | 69 |

## மானியக் கோரிக்கை எண்.26

## வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

## கொள்கை விளக்கக் குறிப்பு 2022–2023

### முன்னுரை

தமிழ்நாடு, 2021–ஆம் ஆண்டில் சுமார் 53 சதவிகித நகர மக்கள் தொகையுடன், நாட்டின் நகரமயமாக்கப்பட்ட முதன்மை மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. 2030–ஆம் ஆண்டில் இம்மாநிலத்தின் நகர்ப்புற மக்கள் தொகை 57 சதவிகிதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இம்மாநிலத்தில் உள்ள நகரங்கள் மற்றும் மாநகரங்கள் ஒருங்கிணைந்த பொருளாதாரத்தின் மையமாக விளங்குவதுடன், திறன்களுக்கான களஞ்சியமாகவும் உள்ளன. இந்நகரங்கள் நாட்டின் இதர பகுதிகளிலிருந்து குடியேறும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நம்பிக்கையாகவும் உள்ளது. உற்பத்தித் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி, சேவைத் துறை மற்றும்

அறிவுசார் வளங்களின் எழுச்சி காரணமாக பெருகிவரும் மக்கட்தொகையின் தாக்கம் நகரங்களில் அதிகரிப்பது தொடர்கிறது. இதன் விளைவாக, ஏழை மக்களின் வாழ்விடங்கள் பெருக்கம், நெரிசலான குடியிருப்புகள், வீட்டுவசதி மற்றும் அடிப்படை வசதிகள் பற்றாக்குறை, வறுமை, வேலையின்மை போன்ற நகர மயமாக்கலின் எதிர்மறையான விளைவுகளால் நகர்ப்புற பகுதிகள் அதிக அளவிலான பாதிப்பிற்கு உள்ளாகிறது. எனவே, இதற்கென சரியான கொள்கை வகுக்கப்பட வேண்டியதாகிறது.

நகரமயமாக்கல் அதிகரிக்கும்போது, உற்பத்தித் திறனில் பெருமளவில் முடங்குகின்ற நிலை ஏற்படுகின்றது. நகர்ப்புற ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடில் வீடுகள் பற்றாக்குறை நிலை மேலும் மோசமாகும்.

நகர்ப்புற ஏழைக் குடும்பங்களின் ஏழ்மை நிலையிலான வாழ்க்கையினைக் கருத்தில் கொண்டு

**"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்"** என்ற குறிக்கோளுடன் தமிழ்நாட்டில் வாழும் நகர்ப்புற ஏழைக்குடும்பங்களுக்கு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வீட்டுவசதியினை ஏற்படுத்தித்தர **முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால்** 1970–ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்டது. 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 11/1971) நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு திறனுக்கேற்ற வீடு வாங்குவதற்கான வாய்ப்பளிப்பது உள்ளிட்ட அடிப்படை வசதிகளை வழங்குவதன் மூலம் குடிசைப்பகுதிகளை மேம்படுத்துதல், அவைகளை குடியிருக்கத்தக்கதாக மாற்றுதல் மற்றும் குடிசைப்பகுதிகளை மேம்படுத்த இயலாதெனில் அத்தகைய பகுதிகளை அகற்றுதல் ஆகிய நோக்கங்களுடன் இயற்றப்பட்டது. குடிசைப்பகுதிகளை மேம்படுத்துதலே முதன்மையான

செயல்பாடாக இருந்தாலும், "தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்" என்ற பெயர் வாரியத்தின் செயல்பாடானது குடிசைப்பகுதிகளை அகற்றுவதுடன் மட்டுமே தொடர்புடையதாக கருதப்பட்டது. உண்மையாக சொல்வதென்றால் தற்போதைய நிலையில், ஆட்சேபனைக்குரிய புறம்போக்கு நிலங்களில் உள்ள குடிசைப்பகுதிகள் அந்நிலத்தை நிர்வகிக்கும் துறைகளால் அகற்றப்படுவதுடன், அக்குடியிருப்புதாரர்கள் ஏற்கனவே மேம்பாடு செய்யப்பட்ட நகர்ப்புற குடியிருப்புகளில் வாரியத்தின் மூலம் மறுகுடியமர்வு செய்யப்படுகிறார்கள்.

நகர்ப்புற ஏழைக் குடும்பங்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த வீட்டு வசதி வாய்ப்புகள் மட்டுமே போதுமானதாக இருக்காது என அரசு கருதுகிறது. குடிநீர், சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, மருத்துவ வசதி, திடக்கழிவு மேலாண்மை, பொது வெளியிடம் போன்ற போதுமான நகர்ப்புற வசதிகளுடன் வீட்டுவசதி ஏற்படுத்துவது

தேவையானதாகிறது. அதற்கிணங்க, இந்த நோக்கத்தினைக் கருத்தில் கொண்டு, இவ்வாரியத்தின் மூலம் அத்தகைய பகுதிகளின் முழுமையான வாழ்விட மேம்பாட்டிற்கு அரசானது முழு முயற்சி செய்கிறது. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் முதன்மைப் பங்களிப்பானது, குடிசைப்பகுதிகளை அகற்றுதலுக்கு பதிலாக, குடிசைப்குதிகளை மேம்படுத்துதல், மற்றும் அவற்றை ஏற்புடைய வாழ்விடமாக மாற்றுதலே ஆகும் என்பதனால், அரசானது 01.09.2021–ஆம் தேதியிட்ட வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின், அரசாணை (நிலை) எண்.103–இன் மூலம் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயரினை **"தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்"** என மாற்றியுள்ளது. வாரியத்தின் பெயரீட்டு முறையில் மேற்சொன்ன மாற்றத்திற்கு சட்ட அங்கீகாரம் வழங்குவதற்காக, 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்)

சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 11/1971) அரசால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

"நிலையான மேம்பாடு இலக்கு–11–இன் (Sustainable Development Goal) படி" 2030 ஆம் ஆண்டிற்குள் "அனைவருக்கும் போதுமான, பாதுகாப்பான மற்றும் திறனுக்கேற்ற வீட்டுவசதி மற்றும் அடிப்படை வசதிகள் பெறுவதை உறுதி செய்தல், நகர்ப்புற குடிசைப்பகுதிகளை மேம்படுத்துதல்" போன்றவை குறிக்கோளாக உள்ளது. இந்த இலக்கினை அடைய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

# 2022–2023 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

**ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)**

| வ.<br>எ<br>ண் | துறைகள் | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை தலைமைச் செயலகம் | அனுமதித்தது | 341,62,27 | --- | 162,19,00 | 503,81,27 |
| 2. | நகர் ஊரமைப்பு இயக்ககம் | சாட்டியது<br>அனுமதித்தது | 1<br>742,58,59 | ---<br>--- | --<br>--- | 1<br>742,58,59 |
| 3. | கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் | சாட்டியது<br>அனுமதித்தது | 1<br>13,55,45 | ---<br>--- | --<br>1 | 1<br>13,55,46 |
| 4. | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் | அனுமதித்தது | 50,00,00 | 1,000,00,01 | 2,015,00,01 | 3,065,00,02 |
| 5. | தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் | அனுமதித்தது | 22,18,81 | 1 | --- | 22,18,82 |
| **6.** | **தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்** | **அனுமதித்தது** | **4,381,06,63** | **4** | **1** | **4,381,06,68** |
| 7. | சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமம் | அனுமதித்தது | 9,50,00 | --- | ---- | 9,50,00 |
| மொத்தம் | | சாட்டியது<br>அனுமதித்தது | 2<br>5,560,51,75 | …<br>1,000,00,06 | –<br>2,177,19,03 | 2<br>8,737,70,84 |

## 1. நிறுவன அமைப்பு

தமிழ்நாடு குடிசைப்பகுதி (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டம் 1971–இன் கீழ் இயங்கிவரும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் மேற்பார்வையில் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் நிறுவன அமைப்பினை விளக்கும் படம் **இணைப்பு–I–ல்** தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2. 1970 முதல் 2022 வரையிலான சாதனைகள்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் 4.40 இலட்சத்திற்கும் மேல் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் வீடுகள் (மறுகட்டுமானம் உட்பட) கட்டப்பட்டுள்ளன. சென்னை பெருநகர் வளர்ச்சி திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின்கீழ் 1.31 இலட்சம் குடும்பங்களுக்கு மேம்படுத்தப்பட்ட மனைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் சென்னை மாநகரில் 1,15,500 அடுக்குமாடிக் குடியிருப்புகளும், இதர நகரங்களில் 58,107 அடுக்குமாடிக் குடியிருப்புகளும் ஆக மொத்தம் 1,73,607 அடுக்குமாடிக் குடியிருப்புகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

### 3. ஆளுநரின் உரை – 2022

2022–ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் "அடுத்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டினை குடிசைகளற்ற மாநிலமாக மாற்ற வேண்டும் என்பதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டமாகும், குடிசைகளை மாற்றுவது மட்டுமல்லாமல் குடிசைகளில் வாழும் மக்களின் வாழ்விடத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவது என்ற அரசின் நோக்கத்தை எடுத்துக்காட்டும் வகையில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயர் 'தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்' என மாற்றப்பட்டது. நகர்ப்புற ஏழைமக்கள் குறைந்த

விலையில் குடியிருப்புகளைப் பெறும் வகையில், பயனாளிகளின் பங்களிப்புத் தொகை குறைக்கப்பட்டுள்ளது. மேலும், இத்தொகையை எளிதாக தவணை முறையில் செலுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. குடியிருப்போர் நலச் சங்கங்களின் ஈடுபாட்டுடன் குடியிருப்புகளை முறையாகப் பராமரிப்பதை உறுதி செய்ய, **'நம் குடியிருப்பு நம் பொறுப்பு'** என்ற திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2030–ஆம் ஆண்டில், நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு மொத்த வீட்டுவசதித் தேவை 9.53 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் 2030–ஆம் ஆண்டுக்குள் அனைத்து நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கும் குடியிருப்புகள்/வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப,** தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்

நகர்ப்புற வாழ்விடங்கள் மேம்பாடு மற்றும் நகர்ப்புற ஏழைகளின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல் ஆகிய குறிக்கோள்கள் கொள்கைக் குறிப்பு 2022-23-இல் இடம் பெற்றுள்ளன. அதற்கிணங்க, 2030-ஆம் ஆண்டிற்கு முன்னர் அனைத்து நகர்ப்புற ஏழை மக்களுக்கும் வீட்டுவசதி வழங்கும் நோக்கத்துடன் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

**4. வரவு செலவு திட்ட அறிக்கை 2022-23**

2022-23 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பிரதம மந்திரி வீட்டுவசதி(நகர்ப்புறம்) திட்டத்திற்காக **ரூ.3700 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், நகர்ப்புற ஏழை மக்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளுடன் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல் மற்றும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்கள் வீடுகள் கட்டுவதற்கு ஏதுவாக குடும்பம் ஒன்றுக்கு ரூ.2.10

இலட்சம் மானியம் வழங்குதல் போன்ற திட்டப்பணிகளை செயல்படுத்தி வருகின்றது.

## 5. நகர்ப்புற ஏழைகளுக்கான வாழ்விட மேம்பாடு – அணுகுமுறைகள் மற்றும் கொள்கைகள்

முன்னோடி நிறுவனமான தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், மாநிலத்திலுள்ள நகர்ப்புற ஏழை மக்களுக்கு வீடுகள் வழங்குவதில் கவனம் செலுத்துகின்றது. அதன் முதல் பத்தாண்டு சேவைகளில், குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீரகற்று மேம்பாட்டு வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணிகளில் கவனம் செலுத்தியது. இக்குடியிருப்புகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. நகரங்களின் குடிசைப்பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துக்களை தடுக்க தீப்பிடிக்காத வீடுகள் பெருமளவில் கட்டப்பட்டன. பின்னர் நகர ஏழை குடும்பங்களின் விருப்பத்திற்கிணங்க, உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட சென்னை நகர்ப்புற

வளர்ச்சி திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டங்களின் கீழ் உறைவிடத்திற்கான நிதியுதவி மற்றும் நில உரிமையுடன் **"உள்ளது உள்ளபடி"** நிலையில் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் அமைக்கப்பட்டன. நீர் வழிகளின் கரைகள், சாலையின் ஓரங்கள் மற்றும் பொது திட்டப்பணிகளுக்கு தேவைப்படும் இடங்களில் ஏழ்மை நிலையில் வாழும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு சமுதாய மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் ஒருங்கிணைந்த நகரிய மேம்பாட்டைப் போல் மாற்றிடங்களில் அடுக்குமாடி குடியிருப்புகள் வழங்கப்படுகின்றன.

சிதிலமடைந்த அடுக்குமாடி குடியிருப்பு திட்டப்பகுதிகள் மற்றும் அதன் அருகில் குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்கள் மறுகட்டுமானத் திட்டங்களில் கட்டப்படும் கூடுதல் குடியிருப்புகளில் மறுகுடியமர்வு செய்யப்படுகின்றன.

## 5.1 நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் கீழே கூறப்பட்டுள்ள பல்வேறு வீட்டுவசதி மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### 5.1.1 உள்கட்டமைப்புகளுடன் வாழ்விடங்களிலேயே அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்

ஆட்சேபனையற்ற நிலங்களில் நெருக்கமாக நகர்ப்புற ஏழைகள் வாழுமிடங்களில் தளப் பரப்பு குறியீட்டின் (FSI) அடிப்படையில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு அக்குடியிருப்புகள் அப்பகுதியில் முன்னர் வாழ்ந்த குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இக்குடியிருப்புகள் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வசதி, மின்தூக்கி, சாலைகள், தெரு மின்விளக்குகள், கான்கீரிட் நடைபாதை, மழைநீர் வடிகால் போன்ற அடிப்படை வசதிகளுடன் கட்டப்படுகின்றன. ஒவ்வொரு குடியிருப்பிலும் ஒரு பல்நோக்கு அறை, படுக்கை

அறை, சமையலறை மற்றும் கழிவறை உள்ளன. இக்குடியிருப்புகள் தகுதி வாய்ந்த நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

### 5.1.2 மாற்றிடங்களில் அடிப்படை மற்றும் சமூக கட்டமைப்பு வசதிகளுடன் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்

நதிக்கரைகள், சாலையின் ஓரங்கள் மற்றும் பொது திட்டப்பணிகளுக்கு தேவைப்படும் இடங்கள் போன்ற இடங்களில் வாழும் நகர ஏழைக் குடும்பங்கள் அவர்களது வாழ்விடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட இயலாது. ஆட்சேபனைக்குரிய பகுதிகளான நதிக்கரைகள், சாலையோரங்கள் மற்றும் இதர பகுதிகளில் உள்ள குடிசைப்பகுதிகளில் வாழும் நகர்ப்புற பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழைக் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்ய அருகில் உள்ள காலி நிலங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. இத்திட்டப்பகுதிகள் ஒருங்கிணைந்த நகரியங்களாக மின்தூக்கி, குடிநீர் வசதி, கழிவுநீரகற்று வசதி மற்றும் சமூக வசதிகளான

பள்ளிகள், நூலகம், பூங்காக்கள், அங்கன்வாடி மையங்கள், ஆரம்ப சுகாதார நிலையம், பேருந்து நிலையம், தொழிற்பயிற்சி நிலையம், சிறு கடைகள், பால் விற்பனை நிலையம், சமுதாயக் கூடம் போன்ற வசதிகளுடன் மேம்படுத்தப் படுகின்றன. மறுகுடியமர்வின் போது வாழ்வாதாரங்களை எளிதாக்க இடமாற்று தொகை மற்றும் வாழ்வாதார தொகை ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படுகிறது. மேலும், வேலை வாய்ப்பு பெறுவதை எளிதாக்க, வாழ்வாதார திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

### 5.1.3 சிதிலமடைந்த அடுக்குமாடி குடியிருப்புகளை இடித்து மீண்டும் கட்டுதல்

நீண்டகால பயன்பாடு மற்றும் மாறுபட்ட தட்பவெப்ப நிலையின் காரணத்தால் பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளில் சில சிதிலமடைந்து வாழத் தகுதியின்றி அப்பகுதிகளில் வாழும் குடும்பங்களின்

உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் ஆபத்தினை ஏற்படுத்தும் நிலையில் உள்ளன. இக்குடியிருப்புகளின் பாதுகாப்புத்தன்மை குறித்து தொழில்நுட்பக் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு, பாதுகாப்பற்றவை என பரிந்துரைக்கப்பட்ட பழைய குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, மறுகட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இக்குடும்பங்கள் அவர்கள் முன்னர் வாழ்ந்த குடியிருப்புகளை காலி செய்து திட்டப் பகுதியின் வெளியே சென்று வாடகை செலுத்தி வாழ்வதற்கு ஒரு முறை கருணைத் தொகையாக ரூ.8,000/– வழங்கப்பட்டது. இத்தொகை ரூ.24,000/– ஆக உயர்த்தி அரசாணை 4(D) எண். 48, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 22.11.2021–இல் ஆணையிடப்பட்டுள்ளது. இப்புதிய குடியிருப்புகள் அங்கு முன்னர் சிதிலமடைந்த குடியிருப்புகளில் வாழ்ந்த குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. பெரும்பான்மையான குடியிருப்புத் திட்டப்பகுதிகளில் அதிக தளப் பரப்பு குறியீட்டினை

அடிப்படையாகக் கொண்டு கூடுதலாகக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, திட்டப்பகுதிகளில் வாழும் குடியிருப்புதாரர்களின் விரிவாக்கப்பட்ட குடும்பங்களுக்கும், ஆக்கிரமிப்பு குடும்பங்களுக்கும் மற்றும் அருகில் வாழும் ஏழை எளிய குடும்பங்களுக்கும் உரிய விதிமுறைகளை பின்பற்றி ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

### 5.1.4 பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டுதல்

நகரங்களில் ஓலைக்குடிசை அல்லது ஓட்டுக் கூரையுடன் கூடிய தற்காலிக வீடுகளில் கழிப்பிட வசதியின்றி சுகாதாரமற்ற நிலையில் வாழ்ந்து வரும் நில உரிமை கொண்ட ஏழைக் குடும்பங்களால் தங்களுக்கான வீடுகளை கட்டிக் கொள்ள இயலவில்லை. கான்கிரீட் கூரையுடன் நிலைத்த தன்மை கொண்ட வீடுகளை அவர்கள் கட்டிக் கொள்வதற்கு ஏதுவாக இக்குடும்பங்களுக்கு அரசால் மானியம் வழங்கப்படுகின்றது.

### 5.1.5 நகரப்பகுதி ஏழை மக்களின் வாழ்விடங்களில் மேம்பாட்டு பணிகள்

நகர்ப்பகுதிகளில் உள்ள ஏழை மக்களின் வாழ்விடங்களை மேம்படுத்தி அப்பகுதிகளை அவர்கள் வாழ்வதற்கு ஏற்றவாறு அமைக்க, தார் சாலைகள், தெரு மின்விளக்குகள், கான்கிரீட் நடைபாதை, பொதுக் குடிநீர் குழாய், மழைநீர் வடிகால் அமைத்தல் போன்ற மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 5.1.6 அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகள் பராமரிப்பு மற்றும் மேம்பாடு

அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளின் நிலையான மேம்பாட்டிற்கும், குடியிருப்புகளின் கட்டமைப்பு உறுதித்தன்மையை அதிகரிக்கவும் கீழே கூறப்பட்டுள்ள புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**i) அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப் பகுதிகள் மறு சீரமைப்பு**

அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப் பகுதிகளின் தோற்றப் பொலிவினை மேம்படுத்த, மறுசீரமைப்பு பணிகள் முன்மொழியப்பட்டுள்ளன. 15 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டடப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகள் படிப்படியாக சீரமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**ii) அடுக்குமாடிக் குடியிருப்புகளை பராமரித்தல்**

அடுக்குமாடிக் குடியிருப்புகளின் ஆயுட்காலம் மற்றும் கட்டமைப்பு நிலைத்தன்மையினை உறுதிப்படுத்த, பழுது நீக்கம் மற்றும் புதுப்பித்தல் பணிகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. "நம் குடியிருப்பு நம் பொறுப்பு" என்ற திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் குடியிருப்புகளை பராமரிக்க குடியிருப்புதாரர்கள் குடியிருப்போர் நல சங்கங்கள் உருவாக்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.

### 5.1.7 திறனுக்கேற்ற வீட்டுவசதிக்கான புதிய தொழில்நுட்பங்கள்

பாதுகாப்பான, நிலைத்த மற்றும் சுற்றுப்புற சூழலுக்கு உகந்த வீடுகளை விரைந்து கட்டுவதற்கு கட்டுருவாக்க கான்கிரீட் (Prefabricated concrete), அலுமினியம் சாரத்தினை கொண்ட ஒற்றை கட்டுமான தொழில்நுட்பம் (Monolithic Concrete Structure) போன்ற நவீனக் கட்டுமானத் தொழில்நுட்பங்களை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் பயன்படுத்துகின்றது.

### 5.1.8 மூன்றாம் தரப்பு தரக் கட்டுபாடு வல்லுநர் குழுக்கள்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்படும் கட்டடங்களின் தரத்தினை ஆய்வு செய்ய சென்னை ஐஐடி, தேசிய தொழில்நுட்ப கழகம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்திலிருந்து மூன்றாம் தரப்பு தரக் கட்டுபாடு வல்லுநர் குழுக்கள் அமைக்கப்படும் என இந்த அரசால் கடந்த ஆண்டு

அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் 6 கல்வி நிறுவனங்களான,

i) CUBE, இந்திய தொழில்நுட்ப நிறுவனம் – சென்னை,
ii) பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி – திண்டுக்கல்,
iii) அரசு பொறியியல் கல்லூரி – சேலம்,
iv) அரசு பொறியியல் கல்லூரி – திருநெல்வேலி,
v) சாஸ்த்ரா பல்கலைக்கழகம்–தஞ்சாவூர்,
vi) அண்ணா பல்கலைக்கழகம்–BIT வளாகம் – திருச்சி.

ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த நிறுவனங்கள் / தொழில்நுட்பக் கல்லூரிகள், கட்டடப் பணிகளின் தரத்தினை பல்வேறு நிலைகளில் ஆய்வு மேற்கொண்டு அறிக்கைகளை சமர்ப்பித்து வருகிறது.

### 5.1.9 இதர திட்டங்கள்

நகரங்களில் ஏழைக் குடும்பங்கள் பொருளாதார நிலையில் தன்னிறைவு அடைந்த பின்னரே நகர ஏழைகளின் மேம்பாடு முழுமையடையும். இது போன்ற வாழ்விடங்களில் வாழும் நகர்ப்புற ஏழைகள், குறிப்பாக

இளைஞர்கள் மற்றும் பெண்கள் பொருளாதார நிலையில் தன்னிறைவு மற்றும் சுயவாழ்வாதாரம் பெறுதல் இன்றியமையாததாகும்.

வேலைவாய்ப்பினை ஊக்குவிக்க திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் சிறந்த தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. வேலை வாய்ப்பினை உறுதி செய்ய சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

## 6. நடைபெற்று வரும் பெரும் திட்டங்கள்

ஏழ்மையற்ற தமிழ்நாடு என்னும் தொலைநோக்கினை அடைய கீழே கூறப்பட்டுள்ள பெரும் திட்டப்பணிகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் செயல்படுத்தப்படுகின்றது.

## 6.1 பிரதம மந்திரி வீட்டுவசதி திட்டம் (நகர்ப்புறம்) – அனைவருக்கும் வீட்டுவசதி திட்டம்

நகர ஏழை மக்களின் வீட்டுவசதி தேவையினை பூர்த்தி செய்ய பிரதம மந்திரி வீட்டுவசதி திட்டம் வகுக்கப்பட்டது. இத்திட்டத்தின் ஒருபகுதியாக, அடிப்படை கட்டமைப்புகளுடன் கூடிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் பயனாளிகள் தாமாக வீடு கட்டும் வகைப்பாட்டின் கீழ் தனி வீடுகள் ஒன்றிய, மாநில அரசுகளின் மானியம் மற்றும் பயனாளிகளின் பங்களிப்புடன் கட்டப்படுகின்றன.

தமிழ்நாட்டில் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டப்பணிகளை நிறைவேற்ற தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மாநில அளவிலான முகமை நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது.

### அ) பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீடுகள் – அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்

நகர்ப்புரப் பகுதிகளில் ஆட்சேபனையற்ற, நெருக்கமான குடிசைப்பகுதிகளில் வாழும்

குடும்பங்களுக்கு அதே இடங்களிலும், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவைச் சார்ந்த குடும்பங்களுக்கு மாற்றிடங்களிலும், அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகள் சுமார் 350 சதுர அடி கட்டுமானப் பரப்பளவில் குடிநீர் விநியோகம், கழிவுநீர் அகற்றும் வசதி, சாலைகள், தெரு மின்விளக்குகள், மழைநீர் வடிகால் போன்ற வசதிகளுடன் கட்டப்படுகிறது. ஒரு குடியிருப்பிற்கு ரூ.1.50 இலட்சம் மானியமாக ஒன்றிய அரசு வழங்குகிறது. தமிழக அரசால் ஒரு அலகிற்கு ரூ.7 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. மீதமுள்ள தொகையினை பயனாளிகள் ஏற்க வேண்டும். மறுகட்டுமான திட்டங்களில் பயனாளிகளுக்கு ஏற்படும் சுமையினை குறைக்க அரசாணை (4D) எண். 54, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 17.12.2021–இல் பயனாளிகள் பங்களிப்பு தொகையினை தவணைகளில் செலுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. பயனாளிகளின் பங்களிப்பு

தொகையினை மேலும் குறைக்க, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையால் நிர்வகிக்கப்படும் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி மற்றும் உறைவிட நிதி ஆகியவற்றிலிருந்து திட்டச் செலவின் ஒரு பகுதியினை பெற அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டப்பணிகளின் ஒரு பகுதியாக, 1,65,347 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.17650.48 கோடி செலவில் கட்ட ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அவற்றுள் 28,092 குடியிருப்புகள் முடிவுற்றுள்ளன. 94,714 குடியிருப்புகள் முன்னேற்றத்தில் உள்ளன மற்றும் 42,541 குடியிருப்புகளுக்கான பணிகள் 2022-23-ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ளன. இத்திட்டப்பணிகளுக்காக ரூ.6,419.99 கோடி செலவிடப்பட்டுள்ளது. (**இணைப்பு-II**).

**ஆ) பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டுதல் – தனி வீடுகள் கட்டுதல்**

சொந்த வீடின்றி, வீடு கட்ட மனையினை கொண்ட, ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்கு கீழ் நகரங்களில் வாழும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் மற்றும் நகர ஏழைக் குடும்பங்களுக்கு வீடு கட்ட மானியமாக குடும்பம் ஒன்றிற்கு ரூ.2.10 இலட்சம் வழங்கப்படுகிறது. இத்திட்டப் பயனாளிகள் அவர்களின் வீடுகளை தாமாகக் கட்ட வேண்டும்.

இத்திட்டத்தின் ஒருபகுதியாக, 4,06,044 தனி வீடுகள் ரூ.12,465.48 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்ட ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அவற்றுள் 2,38,578 வீடுகள் முடிவுற்றுள்ளன. 99,424 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மற்றும் 68,042 வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவுள்ளன. இத்திட்டப் பணிகளுக்காக ரூ.5,951.11 கோடி செலவிடப்பட்டுள்ளது. **(இணைப்பு–III).**

**மேற்கூறப்பட்ட இரண்டு திட்டங்களை செயல்படுத்த 2022-23-ஆம் ஆண்டில் மாநில அரசால் ரூ.3700 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**இ) பழுதடைந்த அடுக்குமாடி குடியிருப்புகள் மறுகட்டுமானம்**

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் சென்னை மற்றும் இதர நகரங்களில் முன்னர் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகள், நீண்ட காலப் பயன்பாடு மற்றும் தட்பவெப்ப மாறுபாடு காரணமாக உறுதித்தன்மை இழந்து சிதிலமடைந்துள்ளன. இக்குடியிருப்புகளில் வாழும் குடும்பங்களின் உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் இது ஆபத்தினை ஏற்படுத்தும். எனவே, அரசால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப குழு திட்டப்பகுதிகளை ஆய்வு செய்து இக்குடியிருப்புகளின் உறுதித் தன்மையினை கருத்திற் கொண்டு, குடியிருப்புகளை இடித்து மறுகட்டுமானம் செய்ய பரிந்துரைக்கிறது. புதிய

குடியிருப்புகள், மறுகட்டுமானத்திற்கு பின்னர், அதிக தளப் பரப்பு கொண்ட புதுமையான மற்றும் வசதியான வடிவங்களில் கூடுதல் குடும்பங்கள் வாழ்வதற்கு தேவையான பொது அடிப்படை வசதிகளைக் கொண்டிருக்கும்.

மறுகட்டுமானம் செய்யப்படும் புதிய குடியிருப்புகள், பழைய குடியிருப்புகளில் முன்னர் வாழ்ந்த குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். கூடுதலாக கட்டப்பட்ட குடியிருப்புகள் இதே திட்டப்பகுதிகளின் அருகில் வாழும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

இதுவரை, மொத்தம் 28,180 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றுள் 4,284 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானம் முடிவுற்றுள்ளன. 14,946 அடுக்குமாடிக் குடியிருப்புகளின் மறுகட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

மீதமுள்ள 8,950 அடுக்குமாடிக் குடியிருப்புகள் படிப்படியாக மறுகட்டுமானம் செய்யப்படும்.

தற்போது சிதிலமடைந்த நிலையிலுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளில், புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுவதற்கு, 2021–22–ஆம் ஆண்டில் ரூ.1200 கோடி செலவில் கூடுதலாக 7500 அடுக்குமாடிக் குடியிருப்புகளை மறுகட்டுமானம் செய்யும் புதிய திட்டம் அரசால் அறிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து, சென்னை மற்றும் இதர நகரங்களில் உள்ள 29 திட்டப்பகுதிகளில் உள்ள 7,524 அடுக்குமாடிக் குடியிருப்புகளை மறுகட்டுமானம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

### ஈ) இடம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு திறனுக்கேற்ற வாடகை வீட்டு வசதி வளாகங்கள்

இத்திட்டத்தின் கீழ் தங்கும் இடங்கள் / குடியிருப்புகளைக் கொண்ட, திறனுக்கேற்ற வாடகை

வீட்டுவசதி வளாக திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இடம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு அவர்கள் பணிபுரியும் இடங்களுக்கு அருகில் வீட்டுவசதி அளித்து அவர்கள் வாழ்வினை எளிதாக்க, இவ்வளாகங்களை அவர்களது சொந்த நிலத்தில் கட்டமைத்து, இயக்கி, பராமரிக்க பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் அனுமதிக்கப்படும். இத்திட்டங்களுக்கு புதுமையான தொழில்நுட்பங்களுக்கான மானியம் ஒன்றிய அரசால் வழங்கப்படும் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களின் மூலம் தேவையான அடிப்படை வசதிகளும் அமைக்கப்படும். இத்திட்டப் பணிகளை தமிழ்நாட்டில் செயல்படுத்தி நிர்வகிக்க ஒன்றிய அரசுடன் ஒரு புரிந்துணர்வு (MoA) ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, தமிழ்நாட்டில் கீழே கூறப்பட்டுள்ள நகரங்களில், மாற்றுத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி திறனுக்கேற்ற வாடகை வீட்டுவசதி வளாகங்கள் கட்டும் பணிகள் செயல்படுத்தப்படும்.

இத்திட்டப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

| வ. எண். | நகரம் | நிறுவனம் | புதுமை தொழில் நுட்பங்களுக் கான மானிய மாக (ரூ.கோடி) | தங்கும் இடங்கள் / குடியிருப்பு கள் |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | தமிழ்நாடு மாநில தொழில்கள் ஊக்குவிப்பு கழகம் (SIPCOT) | 37.44 | 18720 |
| 2 | சென்னை | சென்னை பெட்ரோலியம் நிறுவனம் | 2.88 | 1040 |
| 3 | ஸ்ரீபெரும்புதூர் | SPR நகரம் எஸ்டேட் தனியார் நிறுவனம் | 36.22 | 18112 |
| 4 | ஸ்ரீபெரும்புதூர் | SPR கட்டுமானம் தனியார் நிறுவனம் | 7.95 | 3969 |
| 5 | ஒசூர் | TATA மின்னணு சக்தி நிறுவனம் | 33.00 | 11500 |
| 6 | சென்னை | SPR கட்டுமானம் நிறுவனம் | 10.13 | 5045 |
| மொத்தம் | | | **127.62** | **58386** |

## 7. மாநில நிதியுதவித் திட்டங்கள்

### அ) அடுக்குமாடிக் குடியிருப்புகள் எழில்மிகு தோற்றப் பொலிவு பெற புனரமைப்பு பணிகள்

சென்னை மற்றும் இதர நகரங்களில் தற்போது தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் 1.73 இலட்சம் குடியிருப்புகளை பராமரித்து வருகிறது. குடியிருப்புகள் பராமரிப்பிற்காக பயனாளிகளால் பங்களிப்பு தொகை அளிக்கப்படாத காரணத்தால் உரிய காலங்களில் பராமரிப்பினை முறையாக மேற்கொள்ள இயலவில்லை. மாநில அரசால் வழங்கப்படும் நிதியுதவியின் அடிப்படையில் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு பழுது நீக்குதல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளில் வசிப்பவர்கள், அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு தேவையான பழுதுபார்க்கும் பணிகளை வாரியம் மேற்கொண்டபின், அடுக்குமாடிக் குடியிருப்புதாரர்களால் வருங்கால பராமரிப்பிற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தனர்.

மாண்புமிகு அமைச்சர் (குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்) அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, குடியிருப்புதாரர்கள் மற்றும் குடியிருப்போர் நலச் சங்கங்களுடன் கலந்தாலோசித்து கட்டட புனரமைப்பு பணிகளுக்காக முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவசியமான பணிகளை குடியிருப்புதாரர்கள் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்கின்றனர். சென்னை, சேலம், திருநெல்வேலி, ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், கரூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் அமைந்துள்ள 65 திட்டப்பகுதிகளின் சீரமைப்பு பணிகளுக்கான முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. சீரமைப்பு பணிகளுக்காக முன்மொழியப்பட்ட முக்கிய பணிகளின் விவரங்கள்:

- குடிநீர் வசதி அமைப்புகளை மேம்படுத்துதல்
- பழுதடைந்த கழிவுநீர் குழாய்களை மாற்றியமைத்தல்.

- மின் இணைப்பு பெட்டிகள் (Panel Board) பாதுகாப்பான முறையில் அமைத்தல்.
- குளியலறை மற்றும் கழிவறையில் உள்ள சேதமடைந்த கான்கிரீட் ஜன்னல்களை புதிதாக மாற்றியமைத்தல்.
- வெளிப்புற சுவர்களை முழுமையாகப் பழுது நீக்கி முழுமையாக வண்ணம் பூசுதல்.
- தளம், படிக்கட்டுகள் மற்றும் மாடித்தளம் போன்றவற்றைப் பழுதுபார்த்தல்.

தமிழகத்தின் பல்வேறு இடங்களில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் 65 திட்டப்பகுதிகளிலுள்ள 26,483 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ரூ.68.72 கோடி திட்ட மதிப்பீட்டில் மாநில அரசின் மானியத்தில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் 2022–2023–இல் முடிவுறும்.

**ஆ) அடுக்குமாடிக் குடியிருப்புகளை பராமரித்தல் – புதிய அணுகுமுறை – நம் குடியிருப்பு நம் பொறுப்பு**

கடந்த 15.07.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆய்வின் போது, குடியிருப்போர் நலச் சங்கங்களை உருவாக்குவதற்கும் பராமரிப்பு குறித்து பொறுப்பேற்றுக் கொள்வதற்கும் வசதியாக **"நம் குடியிருப்பு நம் பொறுப்பு"** என்ற புதிய திட்டம் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இப்புதிய திட்டம் பின்வரும் இலக்குகளைக் கொண்டுள்ளது:–

i. அடுக்குமாடிக் குடியிருப்புகளை, சுத்தமாகவும், நேர்த்தியாகவும் பராமரித்தல்.

ii. உரிய நேரத்தில் பழுது மற்றும் புதுப்பித்தல்கள் மேற்கொள்ளுதல்.

iii. அவ்வப்போது அடுக்குமாடிக் குடியிருப்புகளை புதுப்பித்தல்.

iv. குடியிருப்புதாரர்கள் கோரும் கூடுதல் உட்கட்டமைப்புகளை அமைத்தல்.

v. பொது உட்கட்டமைப்பு வசதிகளை பராமரித்தல்.

vi. எழுச்சிமிகு குடியிருப்போர் நலச் சங்கங்களை உருவாக்குதல்.

vii. அடுக்குமாடிக் குடியிருப்புகளின் பராமரிப்புப் பொறுப்பை குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கு மாற்றுதல்.

viii. குடியிருப்போர் நல சங்கத்திற்கு நிதி தொடர்பான அதிகாரம் அளித்தல்.

ix. குடியிருப்புதாரர்களுக்கும் வாரியத்திற்கும் இடையே சுமூகமான ஒருங்கிணைப்பினை உருவாக்குதல்.

x. குறை தீர்க்கும் நெறிமுறைகளை எளிதாக்குதல்.

மாண்புமிகு அமைச்சர் (குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்) அவர்கள் இது தொடர்பான அறிவிப்பினை வெளியிட்டார்கள். அதன்படி, "குடியிருப்போர் நலச் சங்கங்கள் அமைப்பதை எளிதாக்கவும், பயனுள்ள பராமரிப்பு பணிகளில், குடியிருப்போர் நல சங்கங்களை ஈடுபடுத்தவும் **"நம் குடியிருப்பு நம் பொறுப்பு"** திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் வசூலிக்கப்பட்ட பராமரிப்புக்

கட்டணங்களுக்கு இணையான மானியத்தை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு மாநில அரசு வழங்கும். குடியிருப்போர் நலச் சங்கங்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேற்பார்வையில் சிறிய பழுதுகள் மற்றும் வழக்கமான பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படும். பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மூன்று வருட காலத்திற்கு அரசால் உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 302 குடியிருப்போர் நல சங்கங்கள் அமைக்கப்பட்டு, அவற்றுள் 84 குடியிருப்போர் நல சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள குடியிருப்போர் சங்கங்களை உருவாக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**இ) அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பழுது நீக்கம் மற்றும் புதுப்பித்தல் பணிகள்**

அடுக்குமாடிக் குடியிருப்புகளின் மாடிப்படிகள், பால்கனி, தரைத்தளம், கூரைத்தளங்களில் ஏற்படும்

பழுதுகளை நீக்குதல், கூரைத்தளத்தில் ஓடுகள் பதித்தல், குடிநீர் விநியோகம், கழிவுநீரகற்று குழாய்கள், கழிப்பிட பீங்கான்கள் போன்றவைகளை மாற்றுதல், சுவர் பூச்சு மற்றும் வண்ணம் பூசுதல் போன்ற பணிகள் குடியிருப்புகளை மேம்படுத்த செயல்படுத்தப்படும். இப்பணிகள் மாநில அரசின் நிதி, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியினைக் கொண்டு செயல்படுத்தப்படும். இந்த நிதியாண்டில் இப்பணிகளுக்காக ரூ.60.28 கோடி செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

**ஈ) உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி**

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையால் நிர்வகிக்கப்படும் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியிலிருந்து கீழ்க்காணும் பணிகளுக்கு நிதி ஆதாரம் வழங்கப்படும்.

**(i) பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டும் திட்டப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள்**

உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி கட்டண நிதியினை பயன்படுத்தி பயனாளிகள் தாங்கள் வாழும் இடங்களில் தாமாக வீடுகள் கட்டும் திட்டப்பகுதிகளில், அடிப்படை வசதிகளான தார் சாலைகள் அமைத்தல், கான்கீரிட் நடைபாதை, மழைநீர் வடிகால், தெரு மின்விளக்குகள் மற்றும் குடிநீர் விநியோக அமைப்பு போன்றவை அமைக்கப்படும். இப்பணிகள் 182 நகரங்களில் உள்ள 446 திட்டப்பகுதிகளில் வாழும் 90,016 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.50 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள் 198 திட்டப்பகுதிகளில் முடிவுற்றுள்ளன மற்றும் 140 திட்டப்பகுதிகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகளுக்காக இதுவரை ரூ.17.49 கோடி

செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிவுறும்.

**ii) அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகள்**

உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியுதவியினைக் கொண்டு அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.18.78 கோடி செலவில் மேம்படுத்தப்படும். கீழே கூறப்பட்டுள்ள கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான பணிகள் துவங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் 2022–23ல் முடிவுறும்.

| வ. எண். | விவரம் | தொகை (ரூ.கோடி) |
|---|---|---|
| 1. | **சென்னை – பெரும்பாக்கம்**<br>13 பூங்காக்கள் மேம்படுத்துதல் | 4.30 |
| 2. | **கோயம்புத்தூர் – நேதாஜிபுரம்**<br>720 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு அணுகு சாலை | 14.48 |
| | **மொத்தம்** | **18.78** |

உ) உறைவிட நிதி

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினர்களுக்கு மலிவான விலையில் வீடுகளை மேம்படுத்துவதற்காக அரசாணை (4D) எண்.135, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 21.07.2017-ல் உறைவிட நிதியினை அரசு ஏற்படுத்தியுள்ளது. உறைவிட நிதியிலிருந்து பின்வரும் இனங்களுக்கு நிதி வழங்க முன்மொழியப்பட்டுள்ளது:

i. மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு பங்களிப்பு தொகையின் ஒரு பகுதியினை வழங்குதல்.
ii. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தால் (NULM) செயல்படுத்தப்படும் வாழ்வாதார திட்டப்பணிகளுக்கு சாத்தியமான இடைவெளி நிதியினை வழங்கல்.

iii. குடியிருப்பு நலச் சங்கங்களை உருவாக்குதல் மற்றும் நிர்வகிப்பதற்கான பயனாளிகளின் திறனை மேம்படுத்துதல்.

iv. கல்வி நடவடிக்கைகள்.

v. வங்கி கடன் பெற்று உரிய தருணத்தில் மாதாந்திர தொகையினை செலுத்தியவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கல்.

வீட்டுவசதி திட்டங்களுக்கான திட்ட செலவின் ஒரு பகுதியை உறைவிட நிதியிலிருந்து மேற்கொள்ள அரசு அனுமதித்துள்ளது.

## 8. பன்னாட்டு நிதி நிறுவனங்களின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

பன்னாட்டு நிதி நிறுவனங்களாகிய உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி, வீட்டுவசதி துறையினை மேம்படுத்த நிதியுதவி வழங்கியுள்ளன.

(1) கொள்கை மேம்பாடு மூலம் நகர வீட்டு வசதித் துறையினை வலுப்படுத்தவும், திறனுக்கேற்ற வீட்டுவசதி திட்டங்களில் தனியார் துறையின்

பங்களிப்பை ஊக்கப்படுத்தவும் (2) தமிழ்நாடு நகர வீட்டுவசதி நிறுவனங்களின் நிலைத்தன்மையினை உயர்த்தவும் அதனை மேம்படுத்தவும் மற்றும் (3) சென்னை மூன்றாவது முதன்மை திட்டத்தினை தயார் செய்வதற்கும் உலக வங்கி நிதியுதவி வழங்குகிறது.

ஆட்சேபனைக்குரிய பகுதிகளில் வாழும் குடும்பங்கள், நகர்ப்புற ஏழை மக்கள் மற்றும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வீட்டுவசதியை ஏற்படுத்துவதற்கும் மண்டல திட்டங்களை தயார் செய்வதற்கும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவி வழங்குகிறது.

## 8.1 உலக வங்கியின் நிதியுதவியுடன் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கான தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டத்தினை ரூ.5363 கோடி (715 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) திட்ட மதிப்பீட்டில், உலக வங்கியின் கடனுதவி ரூ.3750 கோடியுடன் (500

மில்லியன் அமெரிக்க டாலர்கள்) செயல்படுத்த திட்ட முன்மொழிவுகள் உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளன. இத்திட்டம் இரண்டு வெவ்வேறு நிதி ஆதாரங்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றது.

I) **தமிழ்நாடு வீட்டுவசதித் துறை வலுவூட்டல் உபதிட்டத்தின்** கீழ் உலக வங்கியின் கடனுதவி (450 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) ரூ.3375 கோடி திட்ட மதிப்பீட்டில் வீட்டுவசதி துறையின் திட்டங்கள், நிறுவனங்கள் மற்றும் கொள்கைகள் வலுப்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் கொள்கைகள், ஒழுங்குமுறைகள் மற்றும் நிறுவன மாற்றங்கள் படிப்படியாக செயல்படுத்தப்படுகின்றன.

**அ) முதல் தமிழ்நாடு வீட்டுவசதி துறை வலுவூட்ட திட்டத்தின் கீழ் கொள்கை மேம்பாட்டு கடனுதவி** ரூ.1492.40 கோடி (200 மில்லியன் அமெரிக்க டாலர்) நிதியுதவி உலக வங்கியிடமிருந்து பெறப்பட்டு ஜூலை 2020 முதல் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வீட்டுவசதி துறையின்

கொள்கை, சீர்திருத்த நடவடிக்கைகளை வலுவூட்ட தமிழ்நாடு அரசின் வரவு செலவு திட்டத்திற்கு நிதி ஆதாரமாக ரூ. 1492.40 கோடி 2020–21–இல் விடுவித்துள்ளது. இத்திட்டப்பணிகள் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.

i. உள்ளடக்கிய மற்றும் சிறந்த வீட்டுவசதி துறையின் மேம்பாட்டிற்கு கொள்கைகள் மற்றும் நிறுவனங்களை வலுப்படுத்துதல்

ii. திறனுக்கேற்ற வீட்டுவசதி வழங்குவதை அதிகரிப்பதற்கு எளிதான சூழலை மேம்படுத்துதல்

iii. திறனுக்கேற்ற வீட்டுவசதி சந்தையில் தனியார் துறை பங்கேற்பினை அதிகரித்தல்.

**ஆ) திட்டமிடப்பட்டுள்ள இரண்டாவது தமிழ்நாடு வீட்டுவசதி துறையினை வலுவூட்டும் திட்டம்**, உலக வங்கியின் கடனுதவி ரூ.1875 கோடி (250 மில்லியன் அமெரிக்க டாலர்) மற்றும் தமிழ்நாடு அரசின் நிதியுதவி ரூ.165 கோடி (22 மில்லியன் அமெரிக்க

டாலர்) திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் திட்டம் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

i. திறனுக்கேற்ற வீட்டுவசதியினை அதிக அளவில் பெறும் வண்ணம் நிறுவனங்களையும் கொள்கைகளையும் வலுப்படுத்துதல்,

ii. திறனுக்கேற்ற வீட்டுவசதியினை பெருமளவில் ஏற்படுத்தும் வண்ணம் ஏதுவான, சாதகமான சூழலை அதிகப்படுத்துதல் மற்றும்

iii. வீட்டுவசதிப் பிரிவில் நிலைத்த தன்மையையும் பருவநிலை மாற்றங்களின் மீள் தன்மையையும் அதிகரிக்கும் வண்ணம் வரைமுறைகளை ஏற்படுத்துதல்.

இந்திய அரசு இரண்டாவது தமிழ்நாடு வீட்டுவசதித் துறையினை வலுவூட்டும் திட்டத்தை செயல்படுத்த ரூ. 1875 கோடி (250 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) கடனுதவியினை உலக வங்கியிடமிருந்து பெறுவதற்கு உரிய

முன்மொழிவினை சமர்ப்பித்துள்ளது. இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஆகிய நிறுவனங்களை ஈடுபடுத்தி சில முன் நடவடிக்கைகள் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பணிகளுக்கான ஒப்புதல் பல்வேறு நிலைகளில் உள்ளன.

II) **தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டு திட்டம்** ரூ.540 கோடி திட்ட மதிப்பீட்டில் (72 மில்லியன் அமெரிக்க டாலர்கள்), கொள்கை முதலீட்டு திட்டங்களுக்கான உலக வங்கியின் கடனுதவியாக ரூ.375 கோடி (50 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) மற்றும் தமிழக அரசின் இணை நிதி ரூ.165 கோடியுடன் (22 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள வீட்டுவசதி நிறுவனங்களை வலுப்படுத்துவதுடன், திறனுக்கேற்ற வீட்டுவசதியை

அதிகப்படுத்த வழிவகை செய்ய வீட்டுவசதி நிறுவனங்களான தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு கட்டமைப்பு நிதி மேலாண்மை கழகம் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஆகிய நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப உதவி வழங்கப்படும். மேலும் இத்திட்டம் தமிழ்நாடு உறைவிட நிதியத்திற்கு பங்குத் தொகை வழங்கி துணை புரிகிறது. இத்திட்டம் ஜுலை 2020 முதல் செயலாக்கத்திலுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.83.66 கோடி செலவிடப்பட்டு அதில் உலக வங்கியிடமிருந்து மார்ச் 2022 வரை ரூ.52. 95 கோடி பெறப்பட்டுள்ளது.

**8.2 தமிழ்நாட்டில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் நகர ஏழை மக்களுக்கான வீட்டுவசதி திட்டம்**

உள்ளடக்கிய, மீள் தன்மையுடைய மற்றும் நிலையான வீடுகளுக்கான திட்டம் (Inclusive, Resilient and Sustainable Housing for Urban Poor) செயல்படுத்த

மூன்று பகுதிகளாக வரையறுக்கப்பட்டு, ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவி மற்றும் இந்திய அரசின் நிதி பங்கினைக் கொண்டு ரூ.5000 கோடி (715 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) திட்ட மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவி ரூ.3500 கோடி (500 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) மற்றும் தமிழ்நாடு அரசின் பங்கு ரூ.1500 கோடியாகும். இத்திட்டம் மூன்று வகைப்பாடுகளை கொண்டு நகர்ப்புற ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதல் தவணையின் ஒரு பகுதியாக, ரூ.1591 கோடி (215 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) திட்ட மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவி ரூ.1110 கோடி (150 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) மற்றும் ரூ.481 கோடி (65 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) மாநில அரசின் நிதியுதவியுடன் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கூறு–1–ன் கீழ் நீர்நிலைகள் / நீர் வழிப்பாதைகளில் வசிக்கும் நலிவுற்ற மக்களை மறு குடியமர்வு செய்வதற்காக திறனுக்கேற்ற வீட்டு வசதி குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.1239.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ. 949.51 கோடி செலவில் உள்கட்டமைப்பு வசதிகளுடன் 6157 குடியிருப்புகள் கட்டுவதற்கு இதுவரை 9 வேறுபட்ட இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இக்கூறின் கீழ் எஞ்சிய தொகை மறுகுடியமர்வு பணிகளுக்கு பயன்படுத்தப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 30.12.2021 அன்று தஞ்சாவூரில் 969 குடியிருப்புகள் மற்றும் 22.01.2022 அன்று சிவகங்கையில் 900 குடியிருப்புகள் கட்ட அடிக்கல் நாட்டினார். தஞ்சாவூர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ரூ.279.55 கோடி மதிப்பீட்டில் 1869 திறனுக்கேற்ற வீடுகள் கட்டுவதற்கான தொடக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ரெட்டியார்பட்டி திட்டப்பகுதியில் 876

குடியிருப்புகள் ரூ.139.80 கோடி திட்ட செலவில் கட்ட இணையதள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. நாமக்கல்லில் 520 குடியிருப்புகள் ரூ.88.35 கோடி திட்ட செலவிலும் மற்றும் திண்டுக்கல்லில் 870 குடியிருப்புகள் ரூ.132.91 கோடி திட்ட செலவிலும் செயல்படுத்துவதற்கு ஏல ஆவணத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கியின் ஒப்புதல் பெற்றவுடன் இணையதள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட உள்ளது. மீதமுள்ள 2022 குடியிருப்புகள் 4 பகுதிகளில் கட்டுவதற்கு ஆசிய வளர்ச்சி வங்கி கள ஆய்வு மேற்கொண்டு, ஒப்புதல் வழங்கிய பின் பணிகள் மேற்கொள்ளப்படும். திட்டப்பகுதிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | மாவட்டம் / திட்டம் | குடியிருப்புகள் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடி) |
|---|---|---|---|
| **பணியாணை வழங்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டவை** | | | |
| 1. | தஞ்சாவூர் – வல்லம் அய்யனார் கோயில் பகுதி – II | 969 | 149.32 |
| 2. | சிவகங்கை – கழனிவாசல் | 900 | 130.23 |
| | **மொத்தம்** | **1869** | **279.55** |

| வ. எண். | மாவட்டம் / திட்டம் | குடியிருப்புகள் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடி) |
|---|---|---|---|
| **இணையதள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டவை** | | | |
| 3. | திருநெல்வேலி – ரெட்டியார்பட்டி பகுதி–II | 876 | 139.80 |
| | **மொத்தம்** | **876** | **139.80** |
| **ஏல ஆவணத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கியின் ஒப்புதல் கிடைத்தவுடன் இணையதள ஒப்பந்தப்புள்ளி வெளியிடப்பட உள்ளவை.** | | | |
| 4. | நாமக்கல் – பள்ளிப்பாளையம் | 520 | 88.35 |
| | **மொத்தம்** | **520** | **88.35** |
| **ஆசிய வளர்ச்சி வங்கியின் ஒப்புதல் பெற்று இணையதள ஒப்பந்தப்புள்ளி வெளியிடப்பட உள்ளவை** | | | |
| 5. | திண்டுக்கல் – ஒடுக்கம் | 870 | 132.91 |
| | **மொத்தம்** | **870** | **132.91** |
| **ஆசிய வளர்ச்சி வங்கியின் கள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியவை** | | | |
| 6 | தேனி மாவட்டம் | 340 | 51.94 |
| 7 | சேலம் மாவட்டம் | 152 | 23.22 |
| 8 | தென்காசி மாவட்டம் | 480 | 73.33 |
| 9 | மதுரை மாவட்டம் | 1050 | 160.41 |
| | **மொத்தம்** | **2022** | **308.9** |
| | **ஆக மொத்தம்** | **6157** | **949.51** |

கூறு–2–இன் கீழ் பொது – தனியார் பங்களிப்பு முறையின் மூலம் குறைந்த வருவாய் உள்ள தொழிலாளர்கள், இடம் பெயரும் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி மற்றும் பணிபுரியும் பெண்களுக்கு விடுதிகள் ரூ.259 கோடி செலவில் கட்ட தமிழ்நாடு கட்டமைப்பு வசதிகள் கழகத்தால் நிர்வகிக்கப்படும் தமிழ்நாடு உறைவிட நிதிக்கு ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவி அளிக்கும்.

கூறு–3–இன் கீழ் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் வாயிலாக தற்போதுள்ள மற்றும் முன்மொழியப்படும் மேம்பாட்டு திட்டங்களை இணைத்து ரூ.19.98 கோடி செலவில் தயாரிக்கப்படும் மண்டல திட்டமிடுதலுக்கு ஆசிய வளர்ச்சி வங்கி ஆதரவு அளிக்கும்.

மீதமுள்ள தொகை இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவு, நிர்வாக செலவுகள், எதிர்பாராத செலவுகள் மற்றும் வல்லுநர் ஆலோசனை செலவுகளுக்கு பயன்படுத்தப்படும்.

**9. சென்னை நகர நீர்வழிகளை மறுசீரமைத்தல் – ஆற்றங்கரையில் வசிக்கும் குடும்பங்களுக்கு குடியிருப்புகளை வழங்குதல்**

அடையாறு மற்றும் கூவம் ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் குடும்பங்கள், நீர்வளத் துறையால் கணக்கெடுப்பு செய்யப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பிற துறைகளின் ஒருங்கிணைப்புடன் சென்னை நகர நீர்வழிகள் மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகளில் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

பின்வரும் நதிகளின் கரையில் வசிக்கும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களின் மறுகுடியமர்வு குறித்த தற்போதைய நிலை அறிக்கை விபரம்.

| வ. எண். | நீர்வழிகளின் பெயர்கள் | மறுகுடியமர்வு செய்யப்பட வேண்டிய குடும்பங்கள் | மறுகுடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்கள் | மீதமுள்ள குடும்பங்கள் |
|---|---|---|---|---|
| 1 | கூவம் | 14257 | 12832 | 1425 |
| 2 | அடையாறு | 9539 | 4462 | 5077 |
| | **மொத்தம்** | **23796** | **17294** | **6502** |

கூவம் மற்றும் அடையாறு ஆற்றங்கரையில் உள்ள 17,294 குடும்பங்கள் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற சீரமைப்பு திட்டம் மற்றும் அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட குடியிருப்புகளில் குடியமர்த்தப்பட்டனர். மீதமுள்ள 6,502 குடும்பங்களை குடியமர்த்துவதற்கான குடியிருப்புகள் 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னர் முடிக்கப்படும்.

நதிக்கரைகளிலிருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு மறுகுடியமர்வின்போது இடமாற்றுத் தொகை, வாழ்வாதார உதவித் தொகை, பயனாளிகளின் பங்களிப்புத் தொகை மற்றும் பிற வாழ்வாதார உதவிகள் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையால் வழங்கப்படுகிறது.

பக்கிங்ஹாம் கால்வாய், அடையாறு மற்றும் கூவம் ஆற்றில் வடியும் பிற சிறு கால்வாய்களின் கரையோரங்களில் வசிக்கும் குடும்பங்கள் குறித்து கணக்கெடுப்பு செய்யப்பட வேண்டும். நிலங்களை

நிர்வகிக்கும் துறையான நீர்வளத்துறை வருவாய்த் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்துடன் இணைந்து பக்கிங்ஹாம் கால்வாய் கரையோரத்தில் வசிக்கும் குடும்பங்களின் கணக்கெடுப்பினை மேற்கொள்ளும்.

**10. சிறப்பு உள்ளடக்கத் திட்டம் (SCP) (2022–2023)**

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களின் மூலம் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த நகர்ப்புற ஏழைக் குடும்பங்கள் பயனடைகின்றன. 2022–23–ஆம் ஆண்டிற்கான SCSP திட்டத்தை செயல்படுத்த ரூ.1225 கோடி, பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கு (TSP) ரூ.35 கோடியினை அரசு வழங்கியுள்ளது. இந்த உதவியைப் பயன்படுத்தி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் 30,852 குடியிருப்புகள் / வீடுகள் (7,430 குடியிருப்புகள் / 23,422 வீடுகள்) பட்டியல்

சாதிகள் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்குக் கட்டி வழங்கும்.

## 11. நில உரிமை / கிரையப்பத்திரங்கள் வழங்கல்

### 11.1 மனைகளுக்கான நில உரிமை

சென்னை மற்றும் 9 நகரங்களில் அரசு மற்றும் பிற துறைகளுக்குச் சொந்தமான நிலங்களிலுள்ள ஏழைகளின் வாழ்விடங்களில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் நகர்ப்புற ஏழைகளுக்கான வாழ்விடப் மேம்பாட்டு பணிகளை "உள்ளது உள்ளபடி" நிலையில் செயல்படுத்தியுள்ளது. இந்த உறைவிடங்கள் அமைந்துள்ள நிலங்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு மாற்றம் செய்யப்பட்டவுடன், நகர்ப்புற ஏழைக் குடும்பங்கள் வாழ்ந்து வரும் மனைகளுக்கான நில உரிமை கிரையப்பத்திரங்கள் வாயிலாக உறுதி செய்யப்படுகிறது. மேற்கூறப்பட்டுள்ள குடும்பங்களுக்கு கிரையப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள நிலை விபரம்.

| வ. எண். | விவரம் | சென்னை | இதர நகரங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | மொத்த மேம்படுத்தப்பட்ட மனைகள் | 131467 | 22393 | 153860 |
| 2 | ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகள் | 111826 | 20308 | 132134 |
| 3 | கிரையப்பத்திரங்கள் வழங்கப்பட்டவை | 43213 | 5000 | 48213 |
| 4 | கிரையப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கை | 68613 | 15308 | 83921 |

கிரையப் பத்திரங்கள் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதின் காரணங்கள் பின்வருமாறு.

i) நிலுவை தொகை செலுத்தாமை

ii) உரிய ஆவணங்கள் கிடைக்கப் பெறாமை.

iii) ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து பின்னர் வாங்கப்பட்ட மனைகளை வரன்முறைப் படுத்துதல்.

iv) சட்டப்பூர்வ வாரிசு பிரச்சனைகள்.

v) நில உரிமை மாற்றம் செயல்முறையில் உள்ளவை

நில உரிமை மாற்றம் செயல்முறைகளை விரைவுபடுத்த அதிகாரமளிக்கப்பட்ட குழு ஒன்று அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு இதுவரை 222 திட்டங்களுக்கான 151.17 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட நிலத்திற்கான முன்மொழிவுகளுக்கு ஒப்புதல் அளித்து அதற்கு அரசாணைகள் வழங்கப்பட்டுள்ளன. 2021–2022–ஆம் ஆண்டில் 66 திட்டப் பகுதிகளுக்கான 85.14 ஹெக்டேர் பரப்பளவு நில உரிமை மாற்றத்திற்கான முன்மொழிவுகளுக்கு குழுவினால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

2022–2023–ஆம் நிதி ஆண்டில் மேம்படுத்தப்பட்ட மனைகளின் ஒதுக்கீடுதாரர்களுக்கு அம்மனைகளுக்கான கிரையப் பத்திரங்கள் விரைவாக பெற்றிட, அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் ஒதுக்கீடுதாரர்களுக்கு நேரடியாகவும் தபால் மூலமாகவும் வரைவு கிரையப் பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

## 11.2 குடியிருப்புகளுக்கான கிரையப் பத்திரங்கள்

குடியிருப்புதாரர்களுக்கான கிரையப் பத்திரங்கள் வழங்குதல் குறித்த நிலை கீழே கூறப்பட்டுள்ளது.

| வ. எண். | விவரம் | குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஒதுக்கீடு செய்யப்பட்டவை | 1,96,889 |
| 2. | கிரையப்பத்திரங்கள் வழங்கப்பட்டவை | 29,538 |
| 3. | 5 வருடங்கள் முடிந்து கிரையப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டியவை | 66,823 |
| 4. | மீதமுள்ள குடியிருப்புகள் | 1,00,528 |

மீதமுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு கிரையப் பத்திரங்களை பின்வரும் காரணங்களால் வழங்க இயலவில்லை.

i) வாடகை ஒதுக்கீடுதாரர்கள் தவணை முறை திட்டத்தின் கீழ் வர விரும்பாதது.

ii) நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகள் மற்றும் மேல்முறையீடுகள்.

iii) இறந்த ஒதுக்கீட்டாளர்களின் குடும்ப உறுப்பினர்களிடையே சட்டப்பூர்வ வாரிசு சிக்கல்கள்.

iv) குடியிருப்புகள் கட்டப்படும் திட்டங்களுக்கு நில உரிமை வாரியத்தின் பெயரில் மாற்றுதல்.

எஞ்சியுள்ள குடும்பங்களுக்கு கிரையப் பத்திரங்கள் வழங்குவதற்காக தொடர் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**12. சமுதாய மேம்பாட்டுப் பணிகள்**

பல்வேறு மனநிலைகளைக் கொண்ட, பல்வேறு குழுக்களை உள்ளடக்கிய, பாதிக்கப்படக்கூடிய இடங்களைச் சேர்ந்த நகர்ப்புர ஏழைக் குடும்பங்கள் ஒரே இடத்தில் குடியிருப்புகளில் மீள்குடியமர்த்தப்படுகின்றனர். அவர்களிடையே ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் ஏதுவான சூழ்நிலையை மேம்படுத்தும் வகையில் புதிய இடத்தில் அவர்கள் சிறப்பாக வாழ்வதற்காகப் பின்வரும் சமூக

மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

i) நகர்ப்புற ஏழைக் குடும்பங்களிடையே பொருளாதார சுதந்திரம் மற்றும் சுயவாழ்வை மேம்படுத்த தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஒருங்கிணைப்பில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பைச் சேர்ந்த 986 நபர்களுக்கு ஓட்டுநர், தையல், இணைய வடிவமைப்பு உள்ளிட்ட ஆறு தொழில்களில் திறன் மேம்பாட்டுப் பயிற்சியினை உரிய நிறுவனங்களைக் கண்டறிந்து சென்னையில் நடத்த பணி ஆணை வழங்கியுள்ளது. முதற்கட்டமாக சென்னையில் உள்ள சாலை போக்குவரத்து நிறுவனம் (IRT) மூலம் 75 நபர்களுக்கு வாகன ஓட்டுநர் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

ii) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்துடன் ஒருங்கிணைந்து வாரியக் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கு திறன் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சென்னை நீங்கலாக பிற மாவட்டங்களில் 3,000 நபர்களுக்கு திறன் பயிற்சிகளை வழங்குவதற்காக பயிற்சி நிறுவனங்களுக்கு பணி ஆணையினை அளித்துள்ளது. பயிற்சியினைத் தொடங்குவதற்கு வீடு வீடாகச் சென்று பிரச்சாரங்கள், நேர்காணல்கள், பயிற்சிபெறும் இளைஞர்களின் விபரங்களை டிஜிட்டல் பதிவேற்றம் செய்தல் ஆகிய பணிகள் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

iii) வாரிய கட்டுமான திட்டத்தின் தொடக்கத்திலிருந்தே பயனாளிகளின் ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக, பிரதம மந்திரி வீட்டு வசதி

திட்டத்தின் (நகர்ப்புறம்) கீழ் சமூக தணிக்கை மேற்கொள்வதற்காக சென்னை கிறித்துவ கல்லூரி, ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி, சென்னை சமூகப்பணி கல்லூரி, மதுரை சமூக அறிவியல் கல்லூரி, இந்து கல்லூரி – திருவள்ளூர் மாவட்டம் மற்றும் பெட்ரீசியன் கலை & அறிவியல் கல்லூரி – சென்னை போன்ற சமூகப்பணி தொடர்பான ஆறு கல்வி நிறுவனங்களுடன் வாரியம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. மேலும் சமூக தணிக்கை நடத்துவதற்காக இந்த நிறுவனங்களுக்கு 7 குடியிருப்பு திட்டப்பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

iv) பெரும்பாக்கம், கண்ணகி நகர் மற்றும் எழில் நகர் போன்ற குடியிருப்புத் திட்டப் பகுதிகளைச் சேர்ந்த மருத்துவம், பொறியியல், சட்டம், வணிக நிர்வாகம் போன்ற உயர்கல்வி பயிலும் 141 ஏழை மாணவ, மாணவியர்க்கு உயர் கல்வியினைத் தொடர வாரியத்தின் பெரும் முயற்சியால் உயர் கல்வி உதவித்தொகையாக தலா ரூ. 30,000/– வீதம் மொத்தம்

ரூ.42.30 இலட்சம் எச்.டி.எப்.சி. (HDFC) வங்கியின் பெரு நிறுவன சமூக பொறுப்பு திட்டத்தின் (CSR) கீழ் வழங்கப்பட்டது.

v) குடியிருப்பில் உள்ள பள்ளி செல்லும் குழந்தைகளின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்காக, மாலை நேரங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் பயிற்சி வகுப்புகள் / கல்வி மையங்கள் நடத்தப்படுகின்றன. மேலும் கல்வி உபகரணங்கள், சிற்றுண்டி, எழுது பொருட்கள் போன்றவையும் அந்நிறுவனங்களால் வழங்கப்பட்டு 1,750 குழந்தைகள் பயனடைகின்றனர்.

vi) கபடி, சிலம்பம், பறை, கால்பந்து, கிரிக்கெட், கைப்பந்து போன்றவற்றில் குழந்தைகள்/இளைஞர்களுக்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், காவல்துறை சிறுவர் மன்றங்கள் மற்றும் காவல் துறை சிறுமியர் மன்றங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொண்டு நிறுவனங்கள் / பெருநிறுவனங்கள் / சமூக மன்றங்கள் மூலமாக

இளைஞர்களுக்கு விளையாட்டுப் பொருட்களும் வழங்கப்படுகின்றன.

vii) குழந்தைகள் உரிமைகள், குழந்தைகள் பாதுகாப்பு, பெண்கள் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு, போதைப்பொருள் தவிர்ப்பு, கல்வியின் முக்கியத்துவம், சுத்தம் மற்றும் சுகாதாரம் போன்றவற்றின் மீதான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அவர்களின் வாழ்க்கை முறையை மாற்றுவதற்கு வசதியாக மீள்குடியேற்றத் திட்டங்களில் நடத்தப்படுகின்றன.

viii) சமூகப்பாதுகாப்புத் திட்டங்கள், தொழிலாளர் நலன், ஆதார், வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டைகள் ஆகியவற்றின் முகவரி மாற்றம் குறித்த முகாம்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்துடன் இணைந்து மாவட்ட நிர்வாகத்தால் குடியிருப்புகளில் நடத்தப்படுகின்றன.

ix) நம் குடியிருப்பு நம் பொறுப்பு திட்டத்தின் கீழ் மறு குடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்கள் ஊக்குவிக்கப்பட்டு, இதுவரை 302 குடியிருப்போர்

நலச்சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. "நம் குடியிருப்பு நம் பொறுப்பு திட்டம்" பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த 300 கலந்தாலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.


மேலும் பல்வேறு முகாம்கள் / செயல்பாடுகள் மூலம் பள்ளிக் கல்வி, உயர்கல்வி, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், தொழிலாளர் நலன் குறித்த விழிப்புணர்வு குடியிருப்பு திட்டப்பகுதிகளில் மேற்கொள்ளவும் வாரியத்தால் திட்டமிடப்பட்டுள்ளது.

**முடிவுரை:**

நகர ஏழை மக்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் தொடர்ந்து பெரும் முயற்சிகளை மேற்கொள்ளும்.

**தா.மோ.அன்பரசன்**
**அமைச்சர்**
**குறு, சிறு மற்றும்**
**நடுத்தரத்தொழில் நிறுவனங்கள்**

**இணைப்பு - I**



நிறுவன அமைப்புப் படம்
தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்
தலைவர்
மேலாண்மை இயக்குநர்
இணை மேலாண்மை இயக்குநர்
செயலர்
தலைமைப் பொறியாளர் வடக்கு
தலைமைப் பொறியாளர் கிழக்கு
தலைமைப் பொறியாளர் மேற்கு
தலைமைப் பொறியாளர் தெற்கு
நிதி ஆலோசகர்
கணக்கு அலுவலர்
மேற்பார்வைப் பொறியாளர் வடக்கு – I
மேற்பார்வைப் பொறியாளர் வடக்கு – II
மேற்பார்வைப் பொறியாளர் கிழக்கு – I
மேற்பார்வைப் பொறியாளர் கிழக்கு – II
மேற்பார்வைப் பொறியாளர் மேற்கு
மேற்பார்வைப் பொறியாளர் தெற்கு
நிர்வாகப் பொறியாளர் வேலூர், திருவள்ளூர் & கோட்டம் – I
நிர்வாகப் பொறியாளர் கோட்டம் – II, கோட்டம் – III & கோட்டம் – IV
நிர்வாகப் பொறியாளர் கோட்டம் – V, கோட்டம் – VII & காஞ்சிபுரம்
நிர்வாகப் பொறியாளர் கோட்டம் – VII, கோட்டம் – VIII, கோட்டம் – IX & விழுப்புரம் (தி.செ. III)
நிர்வாகப் பொறியாளர் கோயம்புத்தூர், திருப்பூர், சேலம் & சேலம் (தி.செ. II)
நிர்வாகப் பொறியாளர் திருச்சி, மதுரை , திருநெல்வேலி, மதுரை (தி.செ. II)
மேற்பார்வைப் பொறியாளர் திட்ட செயலாக்க அலகு (தலைமையிடம்)
நிதி ஆலோசகர் (திட்ட செயலாக்க அலகு)
முதுநிலை திட்ட அலுவலர்
நிர்வாகப் பொறியாளர் திட்டம், தரகட்டுப்பாடு & அ.வீ.தி.
முதன்மை தலைமை சமுதாய வளர்ச்சி அலுவலர்
நிர்வாகப் பொறியாளர் (திட்ட செயலாக்க அலகு)
தலைமை சமுதாய வளர்ச்சி அலுவலர் (திட்ட செயலாக்க அலகு)
தலைமை சமுதாய வளர்ச்சி அலுவலர் (2 Nos.)

## இணைப்பு– II

## பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீடுகள் – செயலாக்க நிலை

(ரூ. கோடி)

| வ. எண். | மாவட்டம் | திட்டப் பகுதிகளின் எண்ணிக்கை | குடியிருப்புகள் | திட்ட மதிப்பீடு | முடிவுற்றவை | முன்னேற்றத்தில் உள்ளவை | தொடங்கப் பட வேண்டிய வை | செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 2 | 864 | 72.96 | 288 | 576 | 0 | 60.42 |
| 2 | செங்கல்பட்டு | 14 | 7368 | 842.56 | 480 | 6888 | 0 | 312.50 |
| 3 | சென்னை | 111 | 53656 | 6932.48 | 3308 | 27837 | 22511 | 1932.21 |
| 4 | கோயம்புத்தூர் | 32 | 14552 | 1276.79 | 1441 | 8095 | 5016 | 359.77 |
| 5 | கடலூர் | 9 | 2092 | 195.14 | 0 | 1820 | 272 | 106.14 |
| 6 | தர்மபுரி | 9 | 3512 | 345.30 | 168 | 1824 | 1520 | 61.93 |
| 7 | திண்டுக்கல் | 4 | 2400 | 244.21 | 0 | 0 | 2400 | 0.14 |
| 8 | ஈரோடு | 31 | 13140 | 1145.27 | 2256 | 10884 | 0 | 721.89 |
| 9 | கள்ளக்குறிச்சி | 2 | 776 | 75.40 | 0 | 776 | 0 | 20.25 |
| 10 | காஞ்சிபுரம் | 3 | 2864 | 281.98 | 2112 | 420 | 332 | 216.36 |
| 11 | கன்னியாகுமரி | 7 | 1500 | 136.87 | 600 | 736 | 164 | 64.35 |

| வ. எண். | மாவட்டம் | திட்டப் பகுதிகளின் எண்ணிக்கை | குடியிருப்புகள் | திட்ட மதிப்பீடு | முடிவுற்றவை | முன்னேற்றத்தில் உள்ளவை | தொடங்கப் பட வேண்டிய வை | செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | கரூர் | 7 | 1974 | 181.70 | 192 | 960 | 822 | 77.14 |
| 13 | கிருஷ்ணகிரி | 3 | 1008 | 100.80 | 528 | 480 | 0 | 37.95 |
| 14 | மதுரை | 11 | 5200 | 487.36 | 1164 | 3640 | 396 | 258.81 |
| 15 | நாகப்பட்டினம் | 3 | 1364 | 154.89 | 320 | 1044 | 0 | 45.04 |
| 16 | நாமக்கல் | 6 | 3224 | 286.52 | 1648 | 1056 | 520 | 178.16 |
| 17 | நீலகிரி | 5 | 872 | 83.78 | 172 | 700 | 0 | 55.63 |
| 18 | பெரம்பலூர் | 1 | 504 | 41.03 | 504 | 0 | 0 | 36.72 |
| 19 | புதுக்கோட்டை | 16 | 5740 | 493.43 | 1920 | 3292 | 528 | 277.81 |
| 20 | இராமநாதபுரம் | 2 | 520 | 45.61 | 256 | 264 | 0 | 38.45 |
| 21 | சேலம் | 9 | 4032 | 370.13 | 292 | 2952 | 788 | 141.03 |
| 22 | சிவகங்கை | 4 | 1508 | 147.75 | 608 | 900 | 0 | 51.72 |
| 23 | தென்காசி | 1 | 480 | 48.05 | 0 | 0 | 480 | 0.00 |
| 24 | தஞ்சாவூர் | 9 | 5009 | 451.39 | 880 | 1473 | 2656 | 83.97 |
| 25 | தேனி | 16 | 4488 | 462.93 | 1223 | 3013 | 252 | 205.96 |

| வ. எண். | மாவட்டம் | திட்டப் பகுதிகளின் எண்ணிக்கை | குடியிருப்புகள் | திட்ட மதிப்பீடு | முடிவுற்றவை | முன்னேற்றத்தில் உள்ளவை | தொடங்கப் பட வேண்டிய வை | செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 26 | திருவள்ளூர் | 11 | 8384 | 1098.84 | 0 | 7544 | 840 | 284.89 |
| 27 | திருவாரூர் | 1 | 120 | 11.61 | 0 | 120 | 0 | 0.43 |
| 28 | தூத்துக்குடி | 7 | 1472 | 145.26 | 212 | 732 | 528 | 37.65 |
| 29 | திருநெல்வேலி | 9 | 4564 | 443.41 | 480 | 1568 | 2516 | 109.18 |
| 30 | திருப்பத்தூர் | 1 | 528 | 48.31 | 528 | 0 | 0 | 38.33 |
| 31 | திருப்பூர் | 13 | 6628 | 555.65 | 3840 | 2788 | 0 | 326.73 |
| 32 | திருவண்ணாமலை | 1 | 192 | 17.26 | 192 | 0 | 0 | 12.95 |
| 33 | திருச்சி | 8 | 2380 | 198.77 | 1776 | 604 | 0 | 175.73 |
| 34 | வேலூர் | 7 | 1568 | 149.64 | 704 | 864 | 0 | 86.71 |
| 35 | விருதுநகர் | 3 | 864 | 77.39 | 0 | 864 | 0 | 3.04 |
| **மொத்தம்** | | **378** | **165347** | **17650.48** | **28092** | **94714** | **42541** | **6419.99** |

## இணைப்பு–III
## பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டம் – செயலாக்க நிலை

(ரூ. கோடி)

| வ. எண். | மாவட்டம் | வீடுகளின் எண்ணிகை | திட்ட மதிப்பீடு | முடிவுற்றவை | முன்னேற்றத்தில் உள்ளவை | தொடங்கப்பட உள்ளவை | செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 1573 | 48.33 | 1005 | 259 | 309 | 27.08 |
| 2 | செங்கல்பட்டு | 13665 | 411.95 | 5108 | 4965 | 3592 | 141.25 |
| 3 | சென்னை | 26881 | 806.43 | 12717 | 8933 | 5231 | 335.16 |
| 4 | கோயம்புத்தூர் | 24523 | 738.08 | 19004 | 3800 | 1719 | 440.18 |
| 5 | கடலூர் | 9587 | 296.04 | 4846 | 2371 | 2370 | 130.13 |
| 6 | தர்மபுரி | 5006 | 157.76 | 2825 | 1173 | 1008 | 70.04 |
| 7 | திண்டுக்கல் | 9283 | 294.77 | 5402 | 1904 | 1977 | 132.84 |
| 8 | ஈரோடு | 13120 | 403.67 | 10360 | 1815 | 945 | 234.02 |

| வ. எண். | மாவட்டம் | வீடுகளின் எண்ணிகை | திட்ட மதிப்பீடு | முடிவுற்ற வை | முன்னேற்றத்தில் உள்ளவை | தொடங்கப்பட உள்ளவை | செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|
| 9 | கள்ளக்குறிச்சி | 2489 | 77.50 | 1061 | 593 | 835 | 29.52 |
| 10 | காஞ்சிபுரம் | 13847 | 416.83 | 4874 | 6192 | 2781 | 159.58 |
| 11 | கன்னியாகுமரி | 24125 | 758.13 | 16545 | 4979 | 2601 | 394.65 |
| 12 | கரூர் | 4188 | 130.56 | 2564 | 687 | 937 | 57.41 |
| 13 | கிருஷ்ணகிரி | 3382 | 103.68 | 2224 | 821 | 337 | 56.29 |
| 14 | மதுரை | 24232 | 731.15 | 17351 | 3931 | 2950 | 402.97 |
| 15 | மயிலாடுதுரை | 1563 | 52.15 | 735 | 415 | 413 | 19.77 |
| 16 | நாகப்பட்டினம் | 2372 | 73.77 | 1038 | 884 | 450 | 36.59 |
| 17 | நாமக்கல் | 9326 | 282.03 | 4827 | 1634 | 2865 | 118.25 |
| 18 | நீலகிரி | 6867 | 258.69 | 4061 | 1608 | 1198 | 97.48 |
| 19 | பெரம்பலூர் | 1939 | 59.49 | 1012 | 557 | 370 | 27.73 |
| 20 | புதுக்கோட்டை | 7747 | 235.61 | 3247 | 1766 | 2734 | 93.25 |

| வ. எண். | மாவட்டம் | வீடுகளின் எண்ணிகை | திட்ட மதிப்பீடு | முடிவுற்ற வை | முன்னேற்றத்தில் உள்ளவை | தொடங்கப்பட உள்ளவை | செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|
| 21 | இராமநாதபுரம் | 4577 | 140.21 | 2622 | 1423 | 532 | 69.10 |
| 22 | இராணிப்பேட்டை | 6305 | 189.08 | 3671 | 1692 | 942 | 91.69 |
| 23 | சேலம் | 29265 | 884.75 | 19898 | 7411 | 1956 | 489.76 |
| 24 | சிவகங்கை | 3031 | 90.76 | 2181 | 521 | 329 | 51.24 |
| 25 | தென்காசி | 9855 | 312.30 | 5201 | 1747 | 2907 | 123.14 |
| 26 | தஞ்சாவூர் | 9572 | 292.36 | 4916 | 2353 | 2303 | 119.27 |
| 27 | தேனி | 9239 | 283.69 | 6622 | 1337 | 1280 | 143.68 |
| 28 | திருப்பத்தூர் | 6977 | 211.11 | 3685 | 1810 | 1482 | 92.82 |
| 29 | திருவள்ளூர் | 32496 | 979.72 | 12917 | 12607 | 6972 | 402.65 |
| 30 | திருவண்ணாமலை | 6154 | 187.53 | 3793 | 1725 | 636 | 95.88 |
| 31 | திருவாரூர் | 3104 | 95.77 | 1321 | 866 | 917 | 39.94 |
| 32 | தூத்துக்குடி | 12889 | 400.36 | 8491 | 2338 | 2060 | 196.97 |

| வ. எண். | மாவட்டம் | வீடுகளின் எண்ணிகை | திட்ட மதிப்பீடு | முடிவுற்ற வை | முன்னேற்றத்தில் உள்ளவை | தொடங்கப்பட உள்ளவை | செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|
| 33 | திருச்சி | 14774 | 450.16 | 8786 | 4136 | 1852 | 233.81 |
| 34 | திருநெல்வேலி | 20186 | 638.98 | 12732 | 3192 | 4262 | 289.92 |
| 35 | திருப்பூர் | 13515 | 406.60 | 10820 | 1940 | 755 | 246.45 |
| 36 | வேலூர் | 8759 | 265.69 | 4441 | 3033 | 1285 | 123.31 |
| 37 | விழுப்புரம் | 4804 | 151.04 | 2051 | 1367 | 1386 | 59.48 |
| 38 | விருதுநகர் | 4827 | 148.75 | 3624 | 639 | 564 | 77.81 |
| **மொத்தம்** | | **406044** | **12465.48** | **238578** | **99424** | **68042** | **5951.11** |




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 06.09.2021 அன்று கருணை அடிப்படையில் 5 வாரிசுதாரர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் பணியமர்த்த பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22.01.2022 அன்று சிவகங்கை மாவட்டம், கழனிவாசல் திட்டப்பகுதியில் ரூ.130.20 கோடி திட்ட மதிப்பீட்டில் 900 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 26.02.2022 அன்று சிறுவன் அ.அப்துல் கலாமின் குடும்பத்திற்கு அவருடைய மனிதநேயம் குறித்த உரையாடலை அங்கீகரிக்கும் வகையில் ஒரு குடியிருப்பு ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்பட்டது.

83

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.